

## வகுப்பு 6 (தமிழ்)

| பரிந்துரைக்கப்படும் கற்பித்தல் செயல் முறைகள் | கற்றல் விளைவுகள் |
|---|---|
| **கற்போருக்கு தனியாகவோ / இணையாகவோ / குழுவாகவோ / கற்க உதவும் வாய்ப்புகளை வழங்கி கீழ்க்காண்பனவற்றைப் ஊக்கப்படுத்த வேண்டும்.**<br>• அவர்களைச் சொந்த மொழியில் பேசவும், உரையாடல் நிகழ்த்தவும் வாய்ப்பளித்தல்.<br>• பயன்படுத்தப்படும் மொழியின் சிறப்பான, சுவையான கூறுகளை எடுத்துரைக்க வாய்ப்பளித்தல்.<br>• விழிப்புணர்வு மற்றும் செயல்பாடுகளை உண்டாக்கக்கூடிய கட்டுரைகள், செய்தித்தாள்கள், இதழ்கள், திரைப்படங்கள் காட்சிகேள்விக் கருவிகள் போன்றவற்றைப் பார்க்கவும், கேட்கவும், படிக்கவும், எழுதவும் அவற்றைப் பற்றிக் கலந்துரையாடவும் மாணவர்களுக்கு வாய்ப்புகள் ஏற்படுத்த வேண்டும்.<br>• குழுக்களாகச் செயல்படவும், ஒருவர் மற்றவருடைய பணிகளைத் திறனாய்வு செய்யவும், வினாக்கள் எழுப்பவும் சுதந்தரமும் வாய்ப்பும் அளிக்க வேண்டும்.<br>• தமிழ்மொழியுடன் சொந்த மொழியைப் படிப்பதற்கும் அவை குறித்துத் திறனாய்வு செய்வதற்குமான சுதந்தரமும் வாய்ப்பும் அளித்தல் வேண்டும். (பிரெய்லி மற்றும் சைகைமொழி சார்ந்த பொருள்கள் கிடைத்திட ஏற்பாடு செய்தல் வேண்டும்)<br>• தாங்கள் வாழும் சமூகம், காலம், சுற்றுப்புறம் ஆகியன குறித்த கட்டுரைகளைப் படித்து அவை தொடர்பான கலந்துரையாடல் நடத்த வாய்ப்பளிக்க வேண்டும்.<br>• சொல் விளையாட்டு முதலான எழுதுதல் தொடர்பான நடவடிக்கைகளைத் தங்கள் சொந்த மொழியில் கட்டமைத்தல். | **கற்போர்**<br>• குழந்தை பல வகையான ஒலிகளை (மழை, தென்றல், தொடர் வண்டி, பேருந்து மற்றும் தெரு வியாபாரிகள் எழுப்பும் ஓசைகள்) தங்கள் சொந்த மொழியிலும் விரும்பும் வகையிலும் கேட்டுச் சுவைத்திடல், இன்புறுதல் (பேச்சு மொழி, சைகைமொழி).<br>• தாங்கள் பார்த்த, கேட்ட உள்ளூர் சமூக நிகழ்வுகள், செயல்பாடுகள், சடங்குகள் போன்றவற்றைப் பற்றித் தயக்கமின்றி வினா எழுப்பவும், கலந்துரையாடவும் செய்தல்.<br>• மாணவர்கள், தாம் படித்த, பார்த்த நிகழ்வுகள் மீதான கட்டுரைகள் எழுதுதல், கேட்ட தலைப்புகள் பற்றித் தங்களின் சொந்த நடையில் கருத்துகளை முன்னெடுத்துச் செல்லல், கதைகளை நீட்டித்தல் போன்றவற்றைச் செய்தல்.<br>• வானொலி, தொலைக்காட்சி, செய்தித்தாள் போன்றவற்றில் தாங்கள் கேட்ட, பார்த்த, படித்த செய்திகளைத் தங்களின் சொந்த மொழிநடையில் கூறுதல்.<br>• பல்வேறு சூழல்களில் பிறரால் சொல்லப்பட்ட சொற்களைத் (பார்வையிழந்தவரின் பயண அனுபவங்கள் போன்றவை) திரும்பக் கூறல்.<br>• தங்கள் பகுதிகளில் காணப்படும் நாட்டுப்புறக் கதைகள் மற்றும் நாட்டுப்புறப்பாடல்களை அறிந்திருத்தல் அவற்றைப் பற்றிக் கலந்துரையாடல்.<br>• மற்றவர்களின் மொழிகள் உணவுப் பழக்கங்கள், வாழ்க்கை நிலை அவற்றில் காணப்படும் வேற்றுமைகள், அவை தன்னுடையதிலிருந்து வேறுபட்டுள்ளமை பற்றிப் பேசுதல். |



- இலக்கணம், தொடரமைப்பு, நிறுத்தக்குறிகள் ஆகியவற்றின் அடிப்படையில் தமிழ்மொழியைப் பகுப்பாய்வு செய்ய வாய்ப்பளித்தல்.
- நடித்தல், நாடகமாந்தர்களாகப் பங்கேற்று நடித்தல்(role play), பாடல், கதை ஒப்புவித்தல், எழுதுதல், புத்தாக்கம் செய்தல், சூழல் அடிப்படையிலான இருவர் உரையாடல் போன்ற கற்பனைத் திறனையும், புத்தாக்கம் செய்வதையும் ஊக்குவிக்கக் கூடிய நடவடிக்கைகளை / நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல். தங்களது எழுத்துப் படைப்புகளையும், அறிக்கைகளையும் தயாரிக்க வாய்ப்புகள் அளித்தல் வேண்டும்.
- இலக்கியம் மற்றும் இலக்கியக் கூறுகளின் புரிந்துகொள்ளுதலை விரிவுபடுத்த வாய்ப்பளித்தல்.
- அகராதிகள் பயன்படுத்துதலை ஊக்குவிப்பதுடன், அவர்களின் செயல்பாடுகளுக்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தித் தருதல் வேண்டும்.
- பண்பாட்டு நிகழ்வுகளில் / விழாக்களில் சூழலின் தேவைக்கு ஏற்ற நாட்டுப்புறப் பாடல்களைச் சேர்க்கவும் பாடவுமான வாய்ப்புகளை அளித்தல்.
- ஒரு நூலை ஆழ்ந்து படித்து அந்நூலின் மையக்கருத்தை ஊகித்தறிதல்.
- மிகநுட்பமாக ஒரு நூலை ஆய்ந்து, குறிப்பிட்ட செய்திகளைத் தேடிக்கண்டு பிடித்தல், ஊகித்தறிதல் மற்றும் முடிவு செய்தல்.
- பல்வேறு பாடப்பொருள்கள் பற்றித் தமிழில் உள்ள பனுவல்களை (செய்தித்தாள்கள், பருவ இதழ்கள், கதைகள், இணையத்தில் தகவல் தரும் பகுதிகள் போன்றவற்றில் இருந்து) படித்துப் புரிந்துகொண்டு, அவற்றின்மீதான கருத்துரைகளைப் பகர்தல், தங்களின் விருப்புவெறுப்புகளை வெளிப்படுத்துதல்.
- ஒலியியையு, சந்தம் முதலான யாப்பமைதிக் கூறுகள், மரபுத்தொடர்கள் போன்ற மொழியின் மரபு, நடை, நுட்பங்கள் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு, கதைகள், கட்டுரைகளின் நயம் பாராட்டல்.
- பல வடிவங்களில் எழுதப்பட்ட இலக்கியப் பாடப்பகுதிகளை உரிய ஒலிப்புமுறை, குரல் ஏற்றஇறக்கம் ஆகியவற்றோடு ஒப்புவித்தல்.
- வெவ்வேறு வகையான கட்டுரைகளைப் படித்தல்.
- புதிய சொற்களைத் தெரிந்து கொள்வதில் பேரார்வத்தை வெளிப்படுத்தல், அகராதிகளைப் பார்த்து அவற்றின் பொருளைப் புரிந்துகொள்ள முயலுதல்.
- கைத்தொழில், கட்டடவியல், உழவுத்தொழில், நாட்டியம் ஆகிய துறைகளில் பயன்படுத்தப்படும் மொழியின் தனிச்சிறப்புகளை அறிந்துகொள்ள பேரார்வத்தை வெளிப்படுத்தல், அவற்றின் நயங்களைப் பாராட்டுதல்.
- மற்றவர்களின் அனுபவங்களைத் தேவைக்கு ஏற்ப / தேவை ஏற்படும்போது



எழுதுதல் (தெருக்குழாய்கள், முதன்மைச் சாலைகளின் சந்திப்புகள், பேருந்து நிறுத்தங்கள் போன்ற பொது இடங்களில் நடக்கும் நிகழ்வுகள், கேட்ட பேச்சுகள் ஆகியன.)

- செய்தித் தாள்கள், இதழ்கள், கதைகள் இணையத்தில் காணப்படும் தகவல்கள், கட்டுரைகள் போன்றவற்றைப் படித்துப் புரிந்துகொண்டு தமது விருப்பு வெறுப்புகளையும் கருத்துகளையும் வெளிப்படுத்துதல் (பொது எழுத்துமுறை அல்லது பிரெய்லி எழுத்துமுறை)
- பல்வேறு நோக்கங்களுடன் பல்வேறு தலைப்புகளில் சரியான நிறுத்தக்குறிகளுடன் எழுதுதல்.
- பல்வேறு சூழல்களில் / நிகழ்வின்போது மற்றவர்கள் கூறியவற்றைத் தமது சொந்த மொழியில் எழுதுதல்.
- பல இதழ்களுக்காகவும் நோக்கங்களுக்காகவும் எழுதும்போது சரியான சொற்கள், தொடர்கள், சொற்றொடர்கள், மரபுத்தொடர்கள் (phrases) ஆகியவற்றைப் பயன்படுத்தி எழுதுதல்.

